2021-ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 13-ஆம் தேதி வெள்ளிக்கிழமை கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகளின் உண்மை நகல்

முன்னிலை:- திரு.கு.ராஜேந்திரன்.எம்.இ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி

1. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் பராமரிப்பு பணிக்கு நகராட்சியில் தெருவிளக்கு மின்கம்பியாளர்கள் போதுமானதாக இல்லாததால் வார்டு எண்.01 முதல் 24 வரையுள்ள வார்டுகளில் உள்ள தெருவிளக்கு பாராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மீதான புகார்கள் மீது நடவடிக்கை எடுத்து உடனுக்குடன் தெருவிளக்கு எரிவிக்க காலதாமதம் ஏற்படுவதால் பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே மேற்படி குறைகளை களைய வேண்டி 1 முதல் 24 வார்டுகளில் தெருவிளக்கு மற்றும் உயர் கோபுர விளக்குகள் பராமரிப்பு பணிகளை கீழ்கண்டவாறு பிரித்து பணிகளை மேற்கொள்ள மன்ற அங்கிகாரம் கோரப்படுகிறது.

| பணியின் விவரம் | மதிப்பீடுதொகை (ருபாய்லட்சத்தில் ) | பணி முடிக்கப் பட வேண்டிய காலம் |
|---|---|---|
| இந்நகராட்சி வார்டு எண். 01 முதல் 12 வரையுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகள் மற்றும் உயர் கோபுர விளக்குகள் தனியார் மூலம் பராமரிப்பு செய்தல். | 4.50 | 3 மாதங்கள் |
| இந்நகராட்சி வார்டு எண். 13 முதல் 24 வரையுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகள் மற்றும் உயர் கோபுர விளக்குகள் தனியார் மூலம் பராமரிப்பு செய்தல். | 4.50 | 3 மாதங்கள் |

அலுவலகக்குறிப்பு
1.அங்கீகாரம் வழங்கலாம்.
2.மேற்படி பணிகளுக்கு செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.840/இ2/2021
தீர்மானஎண்.119:-அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந்நகராட்சி சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் உள்ள மினிபவர் பம்ப் நீரேற்று நிலையங்களில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டிகளில் உள்ள மின்மோட்டார் திறந்தவெளி கிணற்றில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் உள்ள பவர் பம்ப் மோட்டார்கள், பொது கழிப்பிட கிணறுகளில் உள்ள மின்மோட்டார்கள், நகராட்சி பள்ளிகளில் உள்ள மின்மோட்டார்கள் என மொத்தம் உள்ள 343 மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரு.5.00இலட்சத்திற்கு(ருபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.83/இ2/2021)

தீர்மானஎண்.120:-அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**3.** இந்நகராட்சிஎல்லைக்குட்பட்ட **36** வார்டுகளில் டெங்கு, மலேரியா, சிக்குன்குன்யாமற்றும் கொரோனாவைரஸ் தொற்றுநோய் பரவல் தடுப்புமுன்எச்சரிக்கைநடவடிக்கையினைமேற்கொள்ள, தேவையான **80** எண்ணிக்கையிலானதினக்கூலிபணியாளர்களைமாவட்டஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலிபட்டியல் அடிப்படையில் திருவார். L.D. manpower solution pvt.ltd,என்றநிறுவனத்தின் மூலம் பணிமேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேற்படி பணிக்கு தீர்மானஎண் 56 நாள்: 23.02.2021-இல் அங்கீகாரம் பெற்று 31.08.2021 வரை பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு கால அவகாசம் தேவைபடுவதால். இப்பணியின் அவசியம் கருதி மேற்படி பணியினை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொள்ளவும், ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் அதே விலைவிகிதத்தில் திருவாளர் L.D.manpower solution vellore என்ற நிறுவனத்தின் மூலம் தெடர்ந்து 3 மாதங்கள் மேற்கொள்ளஆகும் செலவினத் தொகை ரூ.**30.00** இலட்சம் மட்டும் (ரூபாய் முப்பதுஇலட்சம் மட்டும்) அதாவது வரும் **01.09.2021** முதல் **30.11.2021** வரை பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

(அ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி **3**மாதக் காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(ஆ)மேற்படிபணிக்காகும் செலவினத்தைவருவாய் நிதிதலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.1070/எச்1/2020**

தீர்மானஎண்.121:-அலுவலககுறிப்பு ,அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சி பொதுசுகாதார பணியான திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான **210** எண்ணிக்கையிலான தினக்கூலிப ணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக் கூலிபட்டியல் அடிப்படையில் L.D man power solution (P) LTD vellore என்பவர் சப்ளை செய்து வருகிறார், மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தமானது **30.09.2020**ம் தேதியுடன் முடிவுபெற்றது. மேலும் மேற்படி பணிக்கு பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைஅவர்களுக்கு கருத்துருக்கள் **12.08.2020**ம் தேதியன்று அனுப்பப்பட்டது.

மேற்படி கோப்பின் மீது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி நிலையில் பணிக்கு ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிறுவனத்தின் மூலம் **31.08.2021** வரை பணியினை தெடர்ந்து மேற்கொள்ள தீர்மானஎண் 57நாள்: 23.02.2021-இல் அங்கீகாரம் பெற்று பணி நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு கால அவகாசம் தேவைபடுவதால். ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டு வரும் L.D. Man Power Solution, Vellore நிறுவனத்தின் மூலம் மேலும் 3 மாதகாலத்திற்கு அதவாது **01.09.2021** முதல் **31.11.2021** வரை இப்பணியினை அதே விலைவிகிதத்தில் **210** தினக்கூலி பணியாளர்களை சப்ளை செய்ய வேண்டி மேற்படி நிறுவனத்திற்கு 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும், அதற்காகும்

செலவினத் தொகை ரூ.**96.00** இலட்சத்திற்கு (ரூபாய் தொன்னுாத்தாறு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

(அ) திடக்கழிவு மேலாண்மை பணியின் அத்தியாவசியம் கருதி மேற்படி பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் L.D. Man Power Solution Vellore, நிறுவனத்தின் மூலம் 3 மாதக் காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்காகும் தோரய செலவினத் தொகையினைவருவாய் நிதிதலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.695/எச்1/2018.**

தீர்மானஎண்.122:-அலுவலககுறிப்பு ,அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18-ல் பெருமாள் கோவில் தெரு மற்றும் மாசி தெரு சந்திப்பில் உள்ள சிறுபாலம், கெங்கையம்மன் கோவில் தெரு மற்றும் பாவடி தோப்பு தெரு சந்திப்பில் உள்ள சிறுபாலம் ஆகியவை பழுதடைந்துள்ளதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் பெருத்த இடையூறாக உள்ளது. எனவே, மேற்படி இடங்களில் உள்ள சிறுபாலங்களை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலங்கள் அமைக்கவும், அதற்காகும் மதிப்பீடு தொனைக ரூ.1.25 இலட்சத்திற்கும் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1113/இ1/2021

தீர்மானஎண்.123:-அலுவலககுறிப்பு ,அங்கீகரிக்கப்பட்டது

ஓம்/-கு.ராஜேந்திரன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்(பொ),
ஆம்பூர் நகராட்சி